ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2022.12.30 |

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022 திசெம்பரில் மேலும் தளர்வடைந்தது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு, 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 நவெம்பரின் 61.0 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பர் 57.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, 2022இன் இரண்டாம் அரைப்பகுதியில் குறைந்தளவான வாசிப்பைப் பதிவுசெய்தது. அதையொத்த போக்கினைத் தொடர்ந்து, உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2022 நவெம்பரின் 73.7 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 64.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2022 நவெம்பரின் 54.5 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 53.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2022 திசெம்பரில் 0.26 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது. 0.36 சதவீதமாக உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் மாதாந்த அதிகரிப்புக்கள் இதற்கு பிரதானமாகப் பங்களித்தன. இதற்கமைய, மாதகாலப்பகுதியில், உணவல்லா வகையினுள், ஆடைகள் மற்றும் காலணி (ஆடைகள்), போக்குவரத்து (விமானக் கட்டணம் மற்றும் வாகன வருமான உத்தரவாத பத்திரக் கட்டணம்) மற்றும் வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் (திரவப் பெற்றோலிய வாயு) துணை வகைகளின் விலைகளில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. எனினும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த மாதாந்த அதிகரிப்பை ஓரளவிற்கு மிதமடையச்செய்து, பிரதானமாக உடன் மீன், கருவாடு, பெரிய வெங்காயம் மற்றும் பாண் ஆகியவற்றில் அவதானிக்கப்பட்ட விலைக் குறைப்புக்கள் காரணமாக, உணவு வகையிலிருந்த பங்களிப்பு 2022 திசெம்பரில் -0.10 சதவீதத்தைப் பதிவுசெய்தது.

அதேவேளை, ஆண்டுச் சராசரிப் பணவீக்கம், 2022 நவெம்பரின் 42.6 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 46.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2022 நவெம்பரின் 49.4 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 47.7 சதவீதத்திற்கு குறைவடைந்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 நவெம்பரின் 31.4 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 34.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

| பணவீக்கம் | 2022 நவெ | 2022 திசெ |
|---|---|---|
| **முதன்மை** | | |
| சுட்டெண் பெறுமதி | 242.6 | 243.2 |
| மாதாந்த மாற்றம் (%) | -0.5 | 0.2 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 61.0 | 57.2 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 42.6 | 46.4 |
| **மையம்** | | |
| சுட்டெண் பெறுமதி | 223.2 | 223.4 |
| மாதாந்த மாற்றம் (%) | 0.8 | 0.1 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 49.4 | 47.7 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 31.4 | 34.6 |

**கொநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்)**




**கொநுவிசு இல் மாதாந்த சதவீத மாற்றத்திலான பங்களிப்பு**




[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2013=100) கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

**துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்) அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம்**




**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு (2013=100)**

| காலம் | | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2021 | திசெம்பர் | 154.7 | 151.3 | 2.7 | 1.3 | 12.1 | 8.3 | 6.0 | 4.4 |
| 2022 | சனவரி | 158.4 | 154.1 | 2.4 | 1.9 | 14.2 | 9.9 | 6.9 | 5.0 |
| | பெப்புருவரி | 160.1 | 155.7 | 1.1 | 1.0 | 15.1 | 10.9 | 7.9 | 5.7 |
| | மாச்சு | 164.9 | 159.4 | 3.0 | 2.4 | 18.7 | 13.0 | 9.1 | 6.5 |
| | ஏப்பிறல் | 180.2 | 172.4 | 9.3 | 8.2 | 29.8 | 22.0 | 11.3 | 8.1 |
| | மே | 195.2 | 182.9 | 8.3 | 6.1 | 39.1 | 28.4 | 14.2 | 10.2 |
| | யூன் | 220.2 | 200.2 | 12.8 | 9.5 | 54.6 | 39.9 | 18.4 | 13.3 |
| | யூலை | 230.1 | 208.0 | 4.5 | 3.9 | 60.8 | 44.3 | 23.1 | 18.7 |
| | ஓகத்து | 235.8 | 212.0 | 2.5 | 1.9 | 64.3 | 46.6 | 28.0 | 20.3 |
| | செத்தெம்பர் | 244.7 | 219.3 | 3.8 | 3.4 | 69.8 | 50.2 | 33.4 | 24.1 |
| | ஒத்தோபர் | 243.8 | 221.4 | -0.4 | 1.0 | 66.0 | 49.7 | 38.3 | 27.8 |
| | நவெம்பர் | 242.6 | 223.2 | -0.5 | 0.8 | 61.0 | 49.4 | 42.6 | 31.4 |
| | திசெம்பர் | 243.2 | 223.4 | 0.2 | 0.1 | 57.2 | 47.7 | 46.4 | 34.6 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்